கி.பி. 6–ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வைணவம் புத்துயிர் பெறத் தொடங்கியது. திருமாலின் அழகிலும், குணத்திலும் ஆழ்ந்து, நெஞ்சுருக ஆழ்வார்கள் பாடிய 4000 பாசுரங்களையும் 11–ம் நூற்றாண்டில் நாதமுனி என்பவர் '**நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்**' என்னும் பெயரில் நூலாக தொகுத்தவர்.

| வ. எண் | ஆழ்வார்கள் | காலம் |
|---|---|---|
| 1. | பன்னிரு ஆழ்வார்கள் | 6–ம் நூற்றாண்டு |
| 2. | பொய்கையாழ்வார் | 6–ம் நூற்றாண்டு |
| 3. | பூதத்தாழ்வார் | 6–ம் நூற்றாண்டு |
| 4. | பேயாழ்வார் | 7–ம் நூற்றாண்டு |
| 5. | திருப்பான ஆழ்வார் | 7–ம் நூற்றாண்டு |
| 6. | திருமழிசை யாழ்வார் | 7–ம் நூற்றாண்டு |
| 7. | தொண்டரடி பொடியாழ்வார் | 8–ம் நூற்றாண்டு |
| 8. | குலசேகர ஆழ்வார் | 8–ம் நூற்றாண்டு |
| 9. | பெரிய ஆழ்வார் | 8–ம் நூற்றாண்டு |
| 10. | ஆண்டாள் | 8–ம் நூற்றாண்டு |
| 11. | திருமங்கை ஆழ்வார் | 9-ஆம் நூற்றாண்டு |
| 12. | நம்மாழ்வார் | 9-ஆம் நூற்றாண்டு |

**1. பொய்கையாழ்வார்**

- பன்னிரு ஆழ்வார்களுள் முதல் ஆழ்வார் ஆவார்.
- காஞ்சிபுரத்தில் ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் திருவெஃகா என்னும் பகுதியில் உள்ள சொன் வண்ணம் செய்த பெருமாள் கோயிலில் உள்ள பொய்கையில் பிறந்தவர்.
- இவரால் அந்தாதியாக பாடப்பட்ட 100 பாடல்களும் முதல் திருவந்தாதி எனப்படுகின்றன.
- முதன் முதலில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் பாடியவர்.
- பொய்கையில் தோன்றிய காரணத்தால் பொய்கையாழ்வார் எனப்பட்டார்.
- ஆழ்வார்களில் சிலர் திருமாலின் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களின் அம்சமாக பிறந்தவர்கள் என்பது வைணவக் கொள்கை. இதன்படி பொய்கையாழ்வார் 'பாஞ்சஜன்யம்' எனப்படும் சங்கின் அம்சமாவார்.

**2. பூதத்தாழ்வார்**

- மாமல்லபுரத்தில் பிறந்த இவர் முதல் ஆழ்வார்களில் இரண்டாமவர் ஆவார்.
- இவருடைய பாசுரங்கள் இரண்டாம் திருவந்தாதி எனப்படுகின்றன. இது நூறு வெண்பாக்களால் ஆனது.
- திருமாலின் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் ஒன்றான 'கௌமாதகி' என்னும் பெயருடைய கதாயுதத்தின் அம்சமாக பிறந்தவர் என வைணவம் நம்புகின்றது.

**3. பேயாழ்வார்**

- திருமயிலை என வழங்கப்படும் மயிலாப்பூரில் பிறந்த இவர், முதல் ஆழ்வார்களில் மூன்றாமவர் ஆவார்.
- இவருடைய பாசுரங்கள் மூன்றாம் திருவந்தாதி எனப்படுகின்றன. இது நூறு வெண்பாக்களால் ஆனது.
- திருமாலின் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் 'நந்தகம்' எனப்படும் வாளின் அம்சமாக பிறந்தவர் என வைணவம் நம்புகின்றது.

**4. திருமழிசையாழ்வார்**

- திருமழிசை என்னும் ஊரில் பிறந்தவர். திருமாலின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான **சக்கரத்தின்** அம்சமாக பிறந்தவர் என வைணவம் நம்புகின்றது.
- இவருடைய பாசுரங்கள் நான்முகன் திருவந்தாதி எனப்படுகின்றன. இது நூறு வெண்பாக்களை உடையது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- நான்முகனை என தொடங்கும் முதல் குறிப்பால் நான்முகன் திருவந்தாதி என்னும் பெயர் பெற்றது.
- மேலும் திருச்சந்த விருத்தம் என்னும் 120 விருத்தங்களை கொண்ட நூலையும் இயற்றியுள்ளார்.
- இவருடைய பிரபந்தங்கள் தான் முதன்முதலில் மற்ற தெய்வங்களை விட திருமலை உயர்வாக சொல்லியவை.
- இவருக்கு முன் தோன்றிய முதல் ஆழ்வார்கள் சமரச பான்மையுடன் சிவனையும் உயர்வாக பாடியுள்ளார்கள்.
- காஞ்சி மன்னன் தன்னை புகழ்ந்து பாடுமாறு இவரிடம் கேட்க திருமழிசை ஆழ்வார் மறுத்துவிட்டார். அதனால் கோபமடைந்த அரசன் அவரை நாட்டை விட்டு வெளியேறும்படி ஆணையிட்டான். உடனே ஆழ்வார் கோயிலுக்குள் சென்று பெருமாளை நோக்கி

**கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா**
**துணிவுடைய செந்நாப் புலவனும் போகின்றேன்**
**நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்.**

- என்று கூறினார். திருமாலும் அவ்வண்ணமே ஆழ்வாரை பின்தொடர்ந்து சென்றார் நடந்ததை அறிந்த மன்னன் அவரிடம் சென்று மன்னிப்பு கேட்டு திரும்பும் படி வேண்டினான். மன்னனை மன்னித்து நாடு திரும்ப எண்ணிய ஆழ்வார்,

**கனிக்கண்ணன் போக்குழிந்தான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டும்**
**துணிவுடைய செந்நாப் புலவனும் போக்கொலிந்தேன்**
**நீயுமுன்றன் பைந்நாகப்பாய் படுத்துக் கொள்.**

- என்று வேண்ட பெருமாளும் அவ்வணமே செய்தார் என்பது வரலாறு.

### 5. நம்மாழ்வார்

| | |
|---|---|
| **பிறந்த ஊர்** | தூத்துக்குடி மாவட்டம்திருகுருவூர் அல்லது ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். |
| **பெற்றோர்** | காரியார் - உடைய நங்கை |
| **குளம்** | பிள்ளைமார்சமுதாயம் |

- நான்கு வேதங்களையும் தீந்தமிழில் பாடியதால் ‘வேதம் தமிழ் செய்த மாறன்’ என்று புகழப்படுகிறார்.
- கம்பர் இயற்றிய சடகோபர் அந்தாதி என்னும் நூலின் பாட்டுடைத் தலைவர் நம்மாழ்வாரே.
- இவர் பிறந்தவுடன் அழுதல், பால் உண்ணுதல் முதலியவற்றை செய்யாமல் இயற்கைக்கு மாறாக இருந்ததால் அவரை ‘மாறன்’ என்று அழைத்தனர்.
- விஷ்வக்சேனரின் அம்சமாக பிறந்த இவர், சடநாடியை வென்றதால் சடகோபன் என்றும் அழைக்கப்பட்டார்.
- யானையை அடக்கும் அங்குசம் போல பரனாகிய திருமாலை தன் அன்பினால் கட்டியமையால் ‘பராங்குசன்’ என்றும் அழைக்கப்பட்டார்.
- தலைவியாக தன்னை வரித்துக் கொண்டு பாடும் போது ‘பராங்குசநாயகி’ என்றும் அழைக்கப்படுகிறார்.

**<u>நம்மாழ்வார் இயற்றிய நூல்கள் 4</u>**

| |
|---|
| 1. திருவிருத்தம் |
| 2. பெரிய திருவந்தாதி |
| 3. திருவாய்மொழி |
| 4. திருவாசிரியம் |
| 5. இவை **ரிக், யஜுர், சாம, அதர்வண** வேதங்களின் சாரமாக அமைந்துள்ளன. |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

திருவாய்மொழி - 1102 பாசுரங்கள்
திரு விருத்தம் - 100 பாசுரங்கள்
திருவாசிரியம் - 7 பாசுரங்கள்
பெரிய திருவந்தாதி - 87 பாசுரங்கள்

**நம்மாழ்வாரின் பிற பெயர்கள்**

| | |
|---|---|
| சடகோபன் | தொண்டர்பிரான் |
| மாறன் | நாவீரர் |
| காரிமாறன் | திருநாவீறு உடையபிரான் |
| பராங்குசன் | உதய பாஸ்கரர் |
| உகுளா பரணன் | வகுள பூஷண பாஸ்கரர் |
| குருகைப்பிரான் | ஞானத்தமிழ் கடல் |
| குருகூர் நம்பி | மெய்ஞான கவி |
| திருவாய்மொழி பெருமாள் | தெய்வஞானக்கவி |
| பெருநல்துறைவன் | பாவலர் தம்பிரான் |
| குமரித்துறைவன் | நாவலர் தம்பிரான் |
| பவரோக பண்டிதன் | வினவாது உணர்ந்த விரகர் |
| முனிவேந்தன் | குழந்தைமுனி |
| பரப்பிரம்ம யோகி | ஸ்ரீ வைணவக் குலபதி |
| ஞானதேசிகன் | பிரபன்னஜன கூடஸ்தர் |
| ஞானபிரான் | மணிவல்லி |

### 6. மதுரகவிஆழ்வார்

- பாண்டிய நாட்டில் திருகுருகூர் (அல்லது) ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள திருக்கோவூரில் ஈஸ்வர வருஷம் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர் நம்மாழ்வார் பிறப்பதற்கு முன் பிறந்து, நம்மாழ்வார் காலத்திற்கு பின்னும் வாழ்ந்தவர்.
- இவர் பெருமாளை தன் பாசுரங்களால் பாடாமல் தன் ஆச்சாரியரான நம்மாழ்வாரையே சிறந்த தெய்வமாக எண்ணி அவரைப் போற்றி 11 பாசுரங்களை பாடியுள்ளார்.
- நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் மதுர கவியாழ்வார் அருளிச் செய்தது 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற ஒரே பாசுரம் தாம். அது திருப்பதிகம் எனப்படுகிறது.
- இவர் வடக்கே அயோத்தி வரை சென்றவர். அங்கிருந்தபோது வானில் ஓர் ஒளியைக் கண்டு அதனை தொடர்ந்து நடந்து வந்தார். அவ்வொளி தென்னகத்தில் இருந்த நம்மாழ்வாரிடம் வந்து அடைந்தது. அன்று முதல் நம்மாழ்வாரையே தனது ஆச்சாரியாராக ஏற்றுக் கொண்டார்.

### 7. குலசேகர ஆழ்வார்

- இவர் சேரர் குலத்தில் திருவஞ்சைக்களத்தில் (கொல்லி நகர்) மன்னர் குலத்தில் தோன்றியவர். இவர் தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவர். இவர் வடமொழியில் முகுந்த மாலை என்னும் நூலினை படைத்துள்ளார்.
- இவர் திருமாலின் மார்பில் இருக்கும் மணி (கௌஸ்துப) அம்சம் பொருந்தியவர். இவரது தந்தையார் சந்திரகுலத்து அரசர் ஆன திடவிரதர் என்பவர் ஆவார்.
- குலசேகர ஆழ்வார் ஆண்ட பகுதிகள் – திருவிதாங்கூர் குட்டநாடு (மலபார்), தென்பாண்டி நாடு (நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி பகுதிகள்).
- இவருடைய பாசுரங்கள் பெருமாள் திருமொழி எனப்படுகின்றன. இவர் திருவேங்கடம், திருகண்ணபுரம், திருவித்துவக்கோடு, சித்திரக்கூடம் ஆகிய தளங்களில் எழுந்தருளியுள்ள பெருமாளை பாடியுள்ளார்.
- திருமலையில் வெங்கடேச பெருமாளின் வாசற்படி குலசேகரப்படி என்று வழங்கப்படுகிறது.
- திருவரங்கம் பெரிய கோயிலில் மூன்றாவதாக இருக்கும் திருசுற்றிலே சேனை வென்றான் திருமண்டபம் என்பதை


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கட்டியுள்ளார். இதனால் இம்மூன்றாவது சுற்றுக்கு இவரது பெயர் இன்றும் வழங்குகிறது.

- திருவரங்கத்தில் குலசேகர ஆழ்வாரால்தான் மண்டபம் கட்டப்பட்டது. இம்மண்டபம் உள்ள பிரகாரத்தை திருப்பணி செய்தவரும் இவரே ஆவார்.

## 8. பெரியாழ்வார்

- விஷ்ணு சித்தர் என்ற இயற்பெயர் கொண்ட பெரிய ஆழ்வார் திருவில்லிபுத்துாரில் பிறந்து வளர்ந்தவர். இறைவனுக்கு பாமாலை பூமாலையும் சாற்றுவதையே தன் பணியாக கொண்டவர் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் கருடனின் அம்சமாக பிறந்தவர்.
- ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாறான ஆண்டாளின் வளர்ப்பு தந்தை ஆவார். ஆண்டாளை திருவரங்கத்தில் உறையும் இறைவனுக்கு மணமுடித்துக் கொடுத்ததினால் அரங்கனுக்கே மாமனார் ஆனவர்.
- மதுரையில் வல்லப தேவ பாண்டிய மன்னனுக்கு எழுந்த ஐயம் தீர்க்கும் பொருட்டு நடைபெற்ற சமய வாதத்தில் வென்று அரசனால் அளிக்கப்பட்ட பட்டத்து யானை மீது வலம் வரும்போது திருமால் திருமகளோடு வானத்தில் கருட வாகனத்தில் எழுந்தருளியிருக்க கண்டு இறைவனுக்கு கண் திருஷ்டி விழுந்து விடுமோ என்று அஞ்சி பாடப்பட்டதே ‘திருப்பல்லாண்டு’ ஆகும்.
- இறைவனுக்கே கண்ணேறு கழிக்க முயன்றதால், இவரை ஆழ்வார்களில் பெரியவர் என்னும் பொருள்பட பெரியாழ்வார் என அழைத்தனர்.
- வைணவ கோயில்களில் வழிபாட்டின் தொடக்கம் மற்றும் முடிவின்போதும் திருவிழாக்களில் சுவாமி புறப்பாடல் மற்றும் கோயில் திரும்பும்போதும் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பாசுரமே இன்றளவும் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் பாடப்பட்டு வருகிறது.
- இவரது பாடல்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் முதல் ஆயிரத்தில் ஒன்று முதல் 12 வரை உள்ள பாசுரங்கள் திருப்பல்லாண்டு எனவும், ஒன்று முதல் 47 வரை உள்ள பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி எனவும் வழங்கப்பட்டன.
- கண்ணனை பிள்ளையாக பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம் தோன்ற முன்னோடியாக அமைந்துள்ளன.

## 9. ஆண்டாள்

- வைணவ ஆழ்வார்களுள் ஆண்டாள் ஒருவரே பெண்ணாவார். **திருப்பாவை, நாச்சியார் திருமொழி** என்னும் இரண்டு பாடல் தொகுதிகளை இயற்றியுள்ளார். இவர் பூமாதேவியின் அவதாரமாக கருதப்படுகிறார்.
- துளசிச் செடியின் கீழ் குழந்தையாக கிடந்த ஆண்டாளை பெரியாழ்வார் எடுத்து, தன் மகளாக பாவித்து வளர்த்து வந்தார். பெரியாழ்வார் ஆண்டாளுக்கு இட்ட பெயர் கோதை. இளம் வயதிலேயே வைணவ கோட்பாடுகள், தமிழ் அனைத்தையுமே தன் வளர்ப்பு தந்தையிடம் கற்றுத் தேர்ந்தார் ஆண்டாள்.
- கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக பெரியாழ்வார் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை, ஆண்டாள் தான் அணிந்து


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்த பின் திரும்பவும் கூடையில் கொண்டு வைத்துவிடுவார்.

- ஒருநாள் இது பெரியாழ்வாருக்கு தெரிந்தவுடன் கோதையை மிகவும் கடிந்து கொண்டு, அவள் சூடிய மாலையை ஒதுக்கிவிட்டு, புதிய மாலையை தொடுத்தார். ஆனால் இந்த புதிய மாலையை இறைவன் ஏற்க வில்லை. ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே தான் விரும்புவதாக ஆசிரியரின் மூலம் கூறினார். அதனால் கோதை சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும், இறைவனையே ஆண்டவள் என்ற பெயரில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார்.
- திருமண வயதை அடைந்த பின் விஷ்ணு சித்தருடைய கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்து வருமாறு பணித்தார். குறித்த நாள் அன்று கோயிலுக்கு அழைத்து செல்லப்பட்ட கோதை கருவறையினுள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டார்.
- ஆண்டாள் தனது பதினைந்தாம் வயதில் இறைவனுடன் கலந்தார். இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களை கொண்டுள்ளது. இந்நூலில் ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்து பாடிய பாடல்கள் அமைந்துள்ளன.
- இவரது இரண்டாவது படைப்பாளர் நாச்சியார் திருமொழி 140 பாடல்களை கொண்டுள்ளது. இறைவனை நினைத்து உருகிப் பாடும் காதல் ரசம் மிகுந்த பாடல்களாக இவை உள்ளன. நாச்சியார் திருமொழி உள்ள வாரணம் ஆயிரம் பாடல் மிகுந்த புகழ் பெற்றது.

**10. தொண்டரடி பொடியாழ்வார்**

- சோழநாட்டில் திருமண்டங்குடி என்னும் ஊரில் பிரபவ வருடம் மார்கழி மாதம், கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தார்.
- இவருடைய இயற்பெயர் ‘விப்ர நாராயணர்’ என்பதாகும். திருவரங்கத்திலேயே வாழ்ந்திருந்து, அத்தல இறைவனுக்கு பாமாலை மற்றும் பூமாலை சாற்றும் சேவையை தன் வாழ்நாள் முழுவதும் செய்தார்.
- இவர் இயற்றிய நூல்கள் திருப்பள்ளியெழுச்சி மற்றும் திருமாலை ஆகியவை ஆகும்.
- சோழ நாட்டு கனிகையான தேவதேவியை மணந்து கொண்டார்.
- அரங்கனுடைய தொண்டர்களின் அடியாகிய தூசி என்னும் பொருள்பட தொண்டரடி பொடி ஆள்வார் என்ற பெயரை ஏற்றுக்கொண்டார்.
- இவர் ஏற்றிய திருப்பள்ளி எழுச்சியே பள்ளியெழுச்சி வகை படைப்புகளுக்கு முன்னோடியாக திகழ்கிறது. இவருடைய பாசுரங்கள் திருமாலை, திருப்பள்ளி எழுச்சி.

**11. திருப்பாணாழ்வார்**

- இவர் சோழ நாட்டின் உறையூரில் கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர். பாணர் குலத்தில் பிறந்தவர். இசைக்கு பெயர் பெற்றது பாணர் குலம். தீண்டாமை கொடுமைக்கு உட்பட்டிருந்தது. அதனால் திருவரங்கத்தின் உள்ளே நுழைவதற்கு அஞ்சி காவிரியின் மறுக்கரையில் இருந்தவாறு ‘பன்’ இசைத்து திருவரங்கனை பாடி வந்தார்.
- லோக சாரங்கர் என்ற பட்டர் பானரை விலகும் படி கூற, அதை உணராமல் பாடிக்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கொண்டிருந்த பானரின் மேல் பட்டர் கல்லை விட்டெறிந்தார். அது அவரின் தலையில் பட்டு குருதி வழிந்து ஓடியது. அதன் பின்னர் பட்டர் கோயிலுக்கு சென்று பார்த்தப்பொழுது ரத்தம் படிந்த முகத்தினராய் இறைவன் பட்டருக்கு காட்சியளித்தவுடன், பாணரை பட்டர் தன் தோளில் சுமந்து திருவரங்கத்தினுள் கொணர்ந்து தன் முன் நிறுத்துமாறும் ஆணையிட்டார். பட்டரும் அவ்வாறே செய்தார்.

- திருப்பாணாழ்வார் முனி வாகனன் என்றும் யோகி வாகனன் என்றும் அழைக்கப்பட்டார்.
- இவர் தன் பூத உடலோடு அரங்கனுடன் இரண்டறக் கலந்தார். 'அமலனாதிபிரான்' என்னும் தலைப்பில் இவர் எழுதிய 10 பாசுரங்கள் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இவர் அரங்கன் மீது பாடிய 10 பாசுரங்களும் அரங்கனின் திருவடியில் தொடங்கி தலைவரை உள்ள உறுப்புகளின் வடிவழகை எடுத்து இயம்புகின்றன.

### 12. திருமங்கையாழ்வார்

- பன்னிரு ஆழ்வார்களுள் இளையவர் மற்றும் இறுதியானவர். சோழ நாட்டிலுள்ள திருவாலி திருநகரி என்னும் ஊருக்கு அருகில் உள்ள திருக்குரையலூரில் பிறந்தார்.
- இவரது இயற்பெயர் கலியன் என்பதாகும். முதலில் சோழ மன்னனின் படைத்தலைவராக இருந்த இவரின் வீரத்தை மிச்சி, திருமங்கை என்ற நாட்டின் குறுநில மன்னன் ஆக்கினான் சோழ மன்னன்.
- குமுதவல்லி என்ற மங்கையை மணந்து கொண்ட திருமங்கை மன்னன் தனது மனைவியின் விருப்பத்தின்படி திருமால் அடியார்களுக்கு சேவை செய்தும், அரங்கனுக்கு கோயில் கட்டுவதிலும், தான் செல்வம் முழுவதையும் இழந்தார். வாசகம் கேட்டு யாரும் தராததினால் கொள்ளையடித்து சேவைகள் செய்தார். இவர் களவாடும் பாதையில் வந்து இறைவன் இவரை ஆட்கொண்டதோடு வேண்டிய செல்வங்களையும் கொடுத்து அருளினார்.

### இவருடைய படைப்புகள்

| | |
|---|---|
| திருவெழுக் கூற்றிருக்கை | ஒரு பாடல்( 47 அடிகள்) |
| சிறிய திருமடல் | ஒரு பாடல்(155 அடிகள்) |
| பெரிய திருமடல் | ஒரு பாடல் ( 29 அடிகள்) |
| திரு நெடுந்தாண்டகம் | 30 பாடல்கள் |
| திருக்குறுந்தாண்டகம் | 20 பாடல்கள் |
| பெரிய திருமொழி | 1084 பாடல்கள். |

### நாலாயிர திவ்ய பிரபந்தம் பாசுரங்களின் பிரிவுகள்

- நாலாயிர திவ்ய பிரபந்தம் பெருமாளை குறித்து பாடப்பட்ட பக்தி பாடல்களின் தொகுப்பாகும். வைணவ சமயத்தின் ஓர் ஆதாரமாகவும், தமிழ்மறையாகவும் இது கொண்டாடப்படுகிறது.
- கி.பி. 6–ம் நூற்றாண்டு முதல் 9–ஆம் நூற்றாண்டுக்குள் வைணவ சமய ஆழ்வார்கள் பன்னிருவர்களினால் இயற்றப்பட்ட பாடல்களை 10–ம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் என்பாரால் தொகுக்கப்பட்டது.
- பின்னர் வந்த மணவாள மாமுனிகள், நாதமுனிகள் தொகுத்த ஆழ்வார்கள் பிரபந்தத்தோடு, திருவரங்கத்தமுதனார் செய்த ராமானுஜ நூற்றந்தாதியையும் சேர்த்து நாலாயிர திவ்யப் பிரபந்தம் என அழைக்கும் படி அருளினார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- **'திவ்ய'** என்றால் **மேலான** என்றும் **'பிரபந்தம்'** என்றால் பலவகை பாடல் தொகுப்பு என்றும் பொருளாகும். **இந்நூலில் வேறு பெயர்கள்:**
    - ஆன்ற தமிழ் மறை
    - ஐந்தாவது வேதம்
    - திராவிட வேதம்
    - திராவிட பிரபந்தம்

**நான்கு பிரிவுகள்**

| | |
|---|---|
| முதலாயிரம் | 947 பாடல்கள் |
| பெரிய திரு மொழி | 1134 பாடல்கள் |
| திருவாய்மொழி | 1102 பாடல்கள் |
| இயற்பா | 817 பாடல்கள் |

தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் **திருவெம்பாவை, திருப்பாவை** பாடல்களை தாய் மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர்.

**திவ்ய பிரபந்தங்கள் 24 வகைப்படும்**

| | |
|---|---|
| திருப்பல்லாண்டு | திரு நெடுந்தாண்டகம் |
| பெரியாழ்வார் திருமொழி | முதல் திருவந்தாதி |
| திருப்பாவை | இரண்டாம் திருவந்தாதி |
| நாச்சியார் திருமொழி | மூன்றாம் திருவந்தாதி |
| பெருமாள் திருமொழி | நான்முகன் திருவந்தாதி |
| திருச்சந்த விருத்தம் | திரு விருத்தம் |
| திருமாலை | திருவாசிரியம் |
| திருப்பள்ளி எழுச்சி | பெரிய திருவந்தாதி |
| அமலனாதிபிரான் | திருவெழுக்கூற்றிருக்கை |
| கண்ணி நுண் சிறுதாம்பு | சிறிய திருமடல் |
| பெரிய திருமொழி | பெரிய திருமடல் |
| திருகுறுந்தாண்டகம் | இராமானுஜ நூற்றந்தாதி |

- இப்பாடல்கள் அனைத்தும் பெருமாளையும், அவரது அவதாரங்கள் குறித்தும் பாடப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடல்கள் 108 திவ்ய தேசங்களில் பாடப்பட்டுள்ளன.
- 4000 பாடல்களில் 1100 பாடல்கள் நம்மாழ்வாரால் இயற்றப்பட்டதாகும். பாசுரங்களின் மொத்த எண்ணிக்கை – **3892** பின்னர் சேர்க்கப்பட்ட ராமானுஜர் நூற்றந்தாதி 108 பாசுரங்கள்.
- முதல் ஆயிரத்தில் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், தொண்டரடி பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகியோரின் பாடல்கள் அமைந்துள்ளன.
- இரண்டாவது ஆயிரத்தில் திருமங்கை ஆழ்வாரின் பாடல்கள் அமைந்துள்ளன.
- மூன்றாவது ஆயிரத்தில் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருவரங்கத்தமுதனார் ஆகியோரின் பாடல்கள் அமைந்துள்ளன. நான்காவது ஆயிரத்தில் நம்மாழ்வாரின் பாடல்கள் அமைந்துள்ளன.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in